# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

## பொருளடக்கம்

126. **K. Pradeep** 609
Pseudo Identity of Women Image in Sila Nerathil Sila Manitharkal (Some time, Some people): A Visual and Discourse Analysis Study

127. **முனைவர் மு. நாகராஜன்** 614
அறநூல்களில் கற்றோரின் குணநலன்களும் பாடுபொருள் மாற்றங்களும்

128. **மு. ஜெயலட்சுமி** 620
அகநானூற்றுக் கொடிப்பூக்களில் பாடுபொருள் மாற்றங்கள்

129. **அ. ராஜி** 626
கல்கியின் சிவகாமியின் சபதத்தில் கலைக் கூறுகள்

130. **வெ. மைதிலி** 631
புதிய தலைமுறையில் சூழலியல் மேம்பாடுகள்

131. **முனைவர் ந. இரஞ்சன்** 635
நாட்டுப்புற விளையாட்டில் அகத்திணையும் புறத்திணையும்

132. **சா. பூங்கொடி** 639
சங்க இலக்கியத்தில் பாடுபொருள் கூறுகள்

133. **S. Sakthivel** 645
Problems and Issues with Unicode for Tamil language

134. **நா. செந்தில்** 650
நீரிழிவுநோயின் குணமும் மருந்தும் - 'குணவாகடம்' சுவடியை முன்வைத்து

135. **ர. ரதி** 654
தொல்காப்பிய பெருந்திணையில் கருத்தியல் மாற்ற வாசிப்புநிலைகள்

136. **கா. காமாட்சி** 660
இலக்கண நூல்களின் பாடுபொருள் நோக்கில் சார்பெழுத்துக்கள்

137. **திரு. க. தங்கவேலு** 664
இல.செ.கந்தசாமியின் புதினங்களின் பாடுபொருள்களில் காதல்

138. **முனைவர் சு. அட்சயா** 669
கலித்தொகையில் உளவியல் (உள்ளஇறுக்கம்)

# 131. நாட்டுப்புற விளையாட்டில் அகத்திணையும் புறத்திணையும்



**முனைவர் ந. இரஞ்சன்**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை - 641 029.

## முன்னுரை

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு* *(குறள்)*

பண்டைக் காலத் தமிழர்கள் தங்களின் உயிர்க்கும் மேலாகப் பாதுகாக்கப்பட்டு வந்த பல்வேறு வகையான மரபுசார் கலைகளின் இன்றைய நிலை என்ன? என்று எத்தனை பேர் நினைத்துப் பார்க்கின்றனர். இன்று நாகரிகம் என்ற பெயரால் செத்தொழிந்து போகின்ற கலைகள் எண்ணற்றவை. இப்படி அழிந்து போகின்ற கலைகள் அனைத்தையும் மீட்டுருவாக்கம் செய்து மேடையேற்றுவது ஒவ்வோர் தமிழனின் கடமையாக இருப்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அதற்கு அடித்தளமாக இக்கட்டுரை அமையும் என்பது திண்ணம்.

## நாட்டுப்புறக் கலை

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் இருந்து வந்துள்ளன. கரகாட்டம், பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காவடியாட்டம், பறையாட்டம், சிலம்பாட்டம், கோலாட்டம், கும்மியாட்டம், நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புற விளையாட்டுக்கள் எனக் கலைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இக்கலைகள் எல்லாம் தமிழர்களின் பொழுதுபோக்கிற்காக மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன என்று எண்ணுதல் பொருந்தாது. அதோடு மகிழ்ச்சி, உடற்பயிற்சி, வாழ்வியல் நெறிகள் உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்மொழியும், தமிழரின் பாரம்பரிய நாகரிகமும், கலையும் நாட்டுப்புற விளையாட்டுக்களும் தமிழர்களுக்குத் தேவையில்லையாம். ஆனால் தமிழ்ப் பண்பாடு மட்டுமே போதுமாம். இது என்ன நியாயமோ? தெரியவில்லை. நாட்டுப்புறக் கலையையும் தமிழ்ப் பண்பாட்டையும் பிரித்தல் என்பது உடம்பிலிருந்து உயிரைப் பிரிப்பதற்குச் சமம். ஆனால் உடலிலிருந்து உயிரைப் பிரிக்கின்ற செயலைத்தான் இன்றைய போலி நாகரிகக் கோமாளிகள் செய்து வருகின்றனர். அவர்களின் கள்ளத்தனத்தைக் கழுவில் ஏற்றுவது இன்றைய மாந்தர்களின் கடமையாகும். இந்தக்